# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

## S.C. NO. 131/2021

## PW1

| | | |
|---|---|---|
| Name | : | ரவி |
| Father's/Husband's Name | : | நாராயணன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.11.2024.
A1 to A3 present.

**எதிரிகள் தரப்பில் குவிமுச . 311 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை 07.03.2017 அன்று மங்களம் காவல் நிலையத்தில் இரவு 08.00 மணியளவில் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிஸ் அதிகாரி யின் பெயர் மற்றும் பதவி எனக்கு தெரியாது . என்னை போலிசார் விசாரித்தபோது என் அண்ணன் மற்றும் சாட்சி மீனா , கமல்நாத், பெரியசாமி , அன்பழகன் ஆகியோர் இருந்தார்கள். என் தம்பி இறந்துவிட்டார் என்ற அடிப்படையில் தான் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என் தம்பி இறந்துவிட்டார் என்ற தகவல் நான் சென்னையில் இருந்தபோது 07.03.2017 அன்று மதியம் 02.00 மணிக்கு என் மனைவி போன் செய்து சொன்னார். அப்போது எதிரிகளை போலிசார் கைதுசெய்து விட்டார்களா என்று எனக்கு

தெரியாது. என் மனைவி சொன்ன தகவல் சரிதானா என்று என் அக்கா மகன் பாஸ்கரன் என்பவரை விசாரித்து தெரிந்து கொண்டேன் . சென்னையில் இருந்து மங்களம் கிராமத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இரவு 08.00 மணிக்கு மங்களம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் . நான் எழுதிய புகார் எத்தனை பக்கம் என்று கேட்டால் தற்போது தெரியவில்லை . புகாரில் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் 3 கையெழுத்து வாங்கினார். அது மட்டும் இல்லாமல் விசாரணைக்காக வேறு சில வெள்ளை பேப்பரிலும் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்களா என்றால் இல்லை. புகாரில் எழுதியது யார் என்று கேட்டால் மங்களம் ஜெயராமன் மகன் மூர்த்தி என்பவர் எழுதினார். அந்த புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது . அந்த புகாரினை எழுதியபோதுஎன் அண்ணன் ,கலைவாணன், சாட்சி மீனா, கமல்நாத், பெரியசாமி , அன்பழகன் ஆகியோர் இருந்தார்கள் . புகாரில் உள்ள தகவல்களை அவர்களும் சொன்னார்களா என்றால் நான் மட்டும் தான் சொன்னேன் . அந்த சமயத்தில் என் தம்பி இறந்துவிட்டார் என்ற துக்கமும் , ஆத்திரம், பதட்டம் இருந்தது. புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று போலிசார் என்னிடம் படித்து காண்பித்தார்கள். புகாரை மூர்த்தி எழுதியவுடனே நான் கையொப்பம் செய்யவில்லை. போலிசார் படித்து காண்பித்தபிறகு தான் கையொப்பம் செய்தேன் . நான் புகார் கொடுத்த போலிசின் பெயர் , பதவி தெரியுமா என்றால் உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன் . அன்று விசாரித்ததற்கு பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை . நான் முதல் விசாணையில் 1 ம் எதிரி 2 ம் எதிரியுடன் கள்ளத்தொடர்பில் இருந்தார் என்று சொல்வது எனது கற்பனை என்று சொன்னால் சரியல்ல . அதனால் 1 ம் எதிரிக்கும், என் தம்பி ரமேசிற்கும் அடிக்கடி தகறாறு வரும் என்று நான் சொல்வது தவறு என்று சொன்னால் தவறல்ல . 1 ம் எதிரி 2 ம் எதிரிக்கும் இடையிலான கள்ளத்தொடர்பு நீடித்து வந்தது என்று நான் சொல்வது தவறு என்றால் தவறல்ல . 07.02.2017 அன்றே என் தம்பி இறந்துவிட்டார் என்று தகவல் கிடைத்ததாகவும் , அதே தினம் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது தவறு என்று சொன்னால் சரியல்ல . நான் கொடுத்த புகார்தான் அ .சா.ஆ.1 என்பது பொய்யானது என்றால் நான் மறுக்கிறேன். 1 ம் எதிரி 2 ம் எதிரிக்கும் இடையிலான கள்ளத்தொடர்பு இருந்தது என்றும் அதன் காரணமாக 1 ம் எதிரி, 3 ம் எதிரியின் துணை கொண்டு என் தம்பியை அடித்து கொலை செய்துவிட்டார் என்று சொல்வதும் பொய்யானது என்றால்

சரியல்ல. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்பதும் , என் அக்கா மீனா மற்றும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . அ.சா.7 பாஸ்கர் என் அக்கா மகன் . அ.,சா.6 பிச்சைக்காரன் என் உடன் பிறந்த அண்ணன் . அ.சா.5 அமலா என் மனைவி . அ.சா.3 கமல்நாத் என் மாமா மகன் . அ.சா.2 மீனா என் உடன் பிறந்த சகோதரி .என் தம்பி இறந்த பிறகு எனது ஊரைச்சேர்ந்தவர்கள் சாலை மறியல் ஈடுபட்டார்களா என்றால் இல்லை. ஆனால் மறுநாள் ரோட்டோரம் உள்ள என் வீட்டருகே கூட்டம் கூடியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 131/2021**

**PW2**

| | | |
|---|---|---|
| Name | : | மீனா |
| Father's/Husband's Name | : | வெள்ளமுஞ்சி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.11.2024.
A1 to A3 present.

**எதிரிகள் தரப்பில் குவிமுச . 311 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நியைத்தில் விசாரித்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. மாலை விசாரித்தார்கள். நேரம் ஞாபகம் இல்லை. ரமேஷ் இறந்த எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை . என்னை விசாரித்த போலிசாரின் பெயர் , பதவி எனக்கு தெரியாது . என்னை போலிசார் விசாரித்தபோது என் அம்மா என் உடன் இருந்தார் . முதல் விசாணையில் சம்வத்திற்கு ஒரு வருடத்திற்கு 1 ம் எதிரி இறந்த ரமேஷை கத்தியால் குத்த முயற்சி செய்தார் என்று சொன்னதைபோல் போலிஸ் விசாணையிலும் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர்களை சமாதானம் செய்து என் தம்பியை வீட்டிற்கு அழைத்துவந்தோம் என்று போலிஸ் விசாணையில் சொன்னேன் . நானும் 2 ம் எதிரி

சரண்யாவும் நூல் மில்லிற்கு வேலைக்கு சென்று வந்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேன். சம்பவம் நடப்பதற்கு முன் நாள் இரவு 08.00 மணிக்கு ரமேசும், சரண்யாவும் தெருவில் சண்டைபோட்டார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேன். நான் 2 ம் எதிரியிடம் நீ உன் வீட்டிற்கு சென்று விடு என் தம்பியிடம் சண்டை போடாதே என்று சொல்விட்டு சென்று விட்டேன் என்று நான் போலிஸ் விசாணையில் சொன்னேன் . மறுநாள் காலை 2 ம் எதிரியை நான் வேலைக்கு அழைத்தபோது அதற்கு இரவு முழுவதும் உங்கள் தம்பி என்னிடம் சண்டையிட்டார் என்றும் , அதனால் நான் வேலைக்கு வரவில்லை என்று என்னிடம் 2 ம் எதிரி சொன்னதாக நான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் . 2 ம் எதிரி குடியிருந்த வீடு பூட்டபட்டிருந்தது என்றும் , அவர் பக்கத்து வீட்டில் இருந்து என்னிடம் பேசினார் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேன் . நான் என் வீட்டில் இருந்தபோது 2 ம் எதிரி என்னை அவர் வீட்டிற்கு அழைத்ததாக போலிஸ் விசாணையில் சொன்னேன் . நான் சென்று பார்த்தபோது என் தம்பியை அடித்துபோட்டு உடம்பு முழுவதும் ரத்த வெள்ளத்தில் இருந்தார் என்று சொன்னேன். நான் கத்தி கூச்சல் போட்டேன் என்று போலிசிடம் சொன்னேன். 2 ம் எதிரி , 3 ம் எதிரியும் ரமேஷின் உடலை இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக சொன்னார்கள் என்று போலிஸ் விசாணையில் சொன்னேன் . அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் செத்துப்போன பிணத்தை நீ ஏன் மருத்துவமனைக்கு எடுத்து செல்கிறாய் , நீ தான் அவனை சாவடித்து விட்டாயே என்று ஜனங்கள் கூறுகிறார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேன் . போலிஸ் வந்து ரமேசின் உடலை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. என் தம்பியின் சாவிற்கு 1 ம் எதிரிதான் காரணம் என்றும் , 1 ம் எதிரியின் கள்ளத்தொடர்புதான் காரணம் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேன். ரமேஷ் இறப்பதற்கு 10-15 ஆண்டுகளாக டெய்லர் வேலையை செய்து வந்தார். அவர் கடையை 5-6 இடங்களுக்கு மாற்றினார் என்றால் சரிதான் . அதன்பிறகு ரமேஷ் டெய்லர் வேலைசெய்ய திருவண்ணாமலைக்கு வந்தார் என்றால் சரிதான் . அந்த வேலையையும் அவர் செய்யாமல் சும்மா சுத்திக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல . ரமேஷ் பெண்களுக்கான துணிகளை தைக்கும் டைலர் என்றால் சரிதான் . அவருக்கு கடைக்கு வரும் சில பெண்களிடம் தவறான தொடர்பு உள்ளது என்றால் சரியல்ல . கடை உரிமையாளருக்கு இந்த

விஷயம் தெரியவந்து ரமேஷை கடையை காலிசெய்ய சொன்னதால் தான் அவர் கடையை மாற்றிக்கொண்டே இருந்தார் என்றால் சரியல்ல . ரமேஷின் மேற்கண்ட பெண்களுடனான தவறான தொடர்பு அந்த பெண்களின் வீட்டாருக்கு தெரியவந்து ரமேஷை எச்சரித்தார்கள் என்றால் சரியல்ல . ஆனாலும் ரமேஷ் தன்னை திருத்திக்கொள்ளாததால் இந்த பெண்கள் வீட்டினர் அவர்களை அடித்து விட்டார்கள் என்றால் சரியல்ல . ரமேஷ் அவ்வாறு இருந்ததால் 2 ம் எதிரி சரண்யா ரமேஷ் இறப்பதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பே ரமேஷை பிரிந்து சென்றுவிட்டார் என்றால் இல்லை. பின்னர் ரமேஷ் 2 ம் எதிரியின் அம்மாவீட்டிற்கே சென்று 2 ம் எதிரியையும் , குழந்தைகளையும் அடித்ததால் 2 ம் எதிரி ரமேசுடன் சேர்ந்து வாழவே இல்லை என்றால் சரியல்ல . 2 ம் எதிரியின் தங்கை தான் முதல் எதிரி திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான் . அதனால் 1 ம் எதிரியும் , 3 ம் எதிரியும் ரமேசுக்கு அறிவுரை கூறி 2 ம் எதிரியுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்தார்கள் என்றால் சரியல்ல. இதனை கேட்காமல் நான் , ரமேஷ், பிச்சைக்காரன், ரவி, அவர் மனைவி அமலா மற்றும் எனது மகன்கள் சென்று 1,3 எதிரிகளை அசிங்கமாக திட்டி மிரட்டினோம் என்றால் சரியல்ல . அதனால் எதிரிகளுக்கும் எனக்கும் பகை இருந்தது என்றால் சரியல்ல . ரமேஷ் தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்றால் சரிதான். ரமேசுக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது . நான் வழக்கிற்காக பொய்யாக மது அருந்தமாட்டார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . ரமேஷ் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் அல்லது அவரை தாக்கிய பெண்கள் குடும்பத்தை சேர்ந்தவர்களால் இறந்திருக்கக்கூடும் என்றாலும் , எதிரிகள் மீதுள்ள பகையின் காரணமாக அவர்கள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல . 1 ம் எதிரி 2 ம் எதிரியுடன் கள்ளத்தொடர்பில் இருந்து வந்துள்ளார் என்பதும் , அதை ரமேஷ் கண்டித்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . அதனால் தான் 2 ம் எதிரி அவர் தாயார் வீட்டிற்கு சென்றதாக நான் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் சமாதானம் செய்து அழைத்துவந்து வாழ ஏற்பாடு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . என்னை 2 ம் எதிரி தன் வீட்டிற்கு அழைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ரமேஷின் பிரேதத்தை ரோட்டில் போட்டு சாலை மறியலில் ஈடுபட்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதும் என் தம்பி ரவி மூலமாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல . இந்த வழக்கு

சம்மந்தமாக எதுவும் தெரியாமல் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல . போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை ஒரு நாளும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 131/2021**

**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | கமல்நாத் |
| Father's/Husband's Name | : | காளி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.11.2024.
A1 to A3 present.

**எதிரிகள் தரப்பில் குவிமுச . 311 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக எங்கு எப்போது விசாரித்தர்கள் என்றால் மங்களம் கிராமத்தில் எங்கள் தெருவில் விசாரித்தார்கள் . தேதி ஞாபகம் இல்லை. என்னை 3- 4 முறை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிசாரின் பெயர், பதிவி ஆகியவை எனக்கு தெரியாது . என்னை தனியாகதான் விசாரித்தார்கள். கூட்டு குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் இறந்த ரமேசும் , 2 ம் எதிரியும் தனிக்குடித்தனம் நடத்தினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 07.03.2017 ம் தேதி காலையில் ரமேஷ் வீட்டை தாண்டி செல்லும்போது அ .சா.2 மீனாவின் குரல் கேட்டு நான் சென்று பார்த்ததாக போலிஸ் விசாணையில் சொல்லியுள்ளேன். அப்போது ரமேஷ் பிணமாக

அவருடைய வாடகை வீட்டில் இறந்து கிடந்ததாகவும் , இறந்து போன ரமேஷின் உடல் முழுவதும் ரத்த காயம் இருந்ததா வும் போலிஸ் விசாரணையில் சொன்னேன் . சடலத்தை வெளியில் வைத்து அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சடலத்தை சாலையில் வைத்து மறியல் செய்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொன்னேன். பிரேதத்தை வைத்து மறியல் செய்ததால் சுமார் 1 1/2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது . இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் , 2 ம்எதிரிக்கும் ரமேசுக்கும் அடிக்கடி தகராறு வரும் என்பது போன்ற தகவல் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல . இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாமல் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.